# திருச்சிராப்பள்ளி மாவட்டம்

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு

## ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கான விளம்பர அறிவிக்கை

ந.க.எண். 8491/2022/த2

நாள்– 09.12.2022

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, அரசாணை எண்.32 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே2)துறை, நாள்–20.04.2022 –இன்படி, ஈப்பு ஓட்டுநர் நிலையில் காணப்படும் பழங்குடியினருக்கான (Scheduled Tribe) குறைவு பணியிடத்தினை சிறப்பு ஆட்சேர்ப்பு முகாம் (Special Recruitment Drive ) மூலம் நிரப்பிடும் பொருட்டு அரசுத் தலைப்பில் காலியாக உள்ள 1 எண்ணிக்கையிலான ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கு தகுதியான நபர்களிடமிருந்து 18.01.2023 அன்று பிற்பகல் 05.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | – | ஈப்பு ஓட்டுநர் |
| 2. | பணி நியமன வகை | – | சிறப்பு ஆட்சேர்ப்பு முகாம் (Special Recruitment Drive ) |
| 3. | ஊதியம் | – | ஊதிய படி நிலை 8(1) –ன்படி தர ஊதியம் ரூ.19500 (ரூ.19500 – ரூ.62000 ) மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளும் |
| 4. | வயது | – | 01.07.2022 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். |
| 5. | வகுப்பு | – | அதிகபட்ச வயதுவரம்பு (01.07.2022 அன்று உள்ளவாறு) |
| | i. பழங்குடியினர் | – | 42 வயதிற்குள். |
| | ii.முன்னாள் இராணுவத்தினர் – (பழங்குடியினர்) | – | 55 வயதிற்குள் |
| | iii. மாற்றுத்திறனாளிகள் (பழங்குடியினர்) | – | 52 வயதிற்குள் |
| 6. | மொத்த பணியிடங்கள் | – | 1 எண்ணிக்கை. |
| 7. | கல்வித்தகுதி | – | 8–ஆம் வகுப்பு (எட்டாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (விதி 5 (b) (i)) |
| 8. | இதர தகுதிகள் | – | மோட்டார் வாகன சட்டம் 1988(மத்திய சட்டம் 59/1988)–ன்படி தமிழக அரசின் தகுந்த அலுவலரால் வழங்கப்பட்ட செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.<br>5 ஆண்டுகளுக்கு குறைவில்லாமல் மோட்டார் வாகனங்களை ஓட்டியமைக்கான நடைமுறை அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும். |
| 9. | விண்ணப்பப் படிவம் | – | இப்பணியிடத்திற்கான விண்ணப்பப் படிவத்தினை **www.tiruchirappalli.nic.in** என்ற இணையதளம் அல்லது தேசிய தொழில்நெறி வழிகாட்டு மைய இணையதளம் **(National Career Service Portal)** **www.ncs.gov.in** ஆகியவற்றில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் |
| 10. | விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | – | **18.01.2023** – பிற்பகல் 5.45 மணி வரை. |

நிபந்தனைகள்:

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை **www.tiruchirappalli.nic.in** என்ற இணையதளம் அல்லது தேசிய தொழில்நெறி வழிகாட்டு மைய இணையதளம் **(National Career Service Portal) www.ncs.gov.in** ஆகியவற்றில் உள்ள விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.

2. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் உள்ளவாறு விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.

3. விண்ணப்பதாரர் கல்வி தகுதி குறித்த சான்று , இருப்பிட சான்று, சாதி சான்று மற்றும் பணி முன் அனுபவ சான்று ஆகியவை சான்றொப்பமிடப்பட்டு கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட சான்றுகள் இணைக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

4. இப்பணியிடம் பழங்குடியினருக்கான குறைவு பணியிடமாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளதால் பழங்குடியினர் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

5. அஞ்சல் வில்லை ரூ.30 ஒட்டப்பட்ட சுய முகவரியுடன் கூடிய அஞ்சல் உறை (10 x 4 Inches Postal Cover ) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

6. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தை 18.01.2023 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் பின்வரும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்.

    **மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி),**
    **மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி பிரிவு), 3–ஆவது தளம்,**
    **திருச்சிராப்பள்ளி – 620 001.**

7. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

9. எந்த ஒரு விண்ணப்பத்தினையும் நிராகரிக்கும் அதிகாரம் நியமன அலுவலருக்கு உண்டு.

10. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முக தேர்வு நடைபெறும் இடம், நாள் மற்றும் நேரம் குறித்த விவரங்கள் நேர்காணல் கடிதம் (Call Letter ) மூலம் அனுப்பி வைக்கப்படும்.

11. தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு அரசாணை எண்.303, நிதி(ஊதியக்குழு) துறை நாள்.11.10.2017, அரசாணை எண்.305 நிதி(ஊதியக்குழு) துறை நாள்.13.10.2017 மற்றும் அரசாணை எண்.306, நிதி (ஊதியக்குழு) துறை நாள்.13.10.2017–ன்படி ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

9/12/2022

**மாவட்ட ஆட்சியரின்**
**நேர்முக உதவியாளர்(வளர்ச்சி),**
**திருச்சிராப்பள்ளி.**

09.12.2022

# திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கான விண்ணப்பப்படிவம்
## (பழங்குடியினருக்கான சிறப்பு ஆட்சேர்ப்பு முகாம்)

கடவுச்சீட்டு
அளவிலான
புகைப்படம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர் | | | | | | | | |
| 2. | ஆண் / பெண் /திருநங்கை | | | | | | | | |
| 3. | தந்தை/கணவர்/பாதுகாவலர் பெயர் | | | | | | | | |
| 4. | பிறந்த தேதி / வயது | நாள் | | மாதம் | | வருடம் | | | |
| | | | | | | | | | |
| | | --------வயது | | | | | | | |
| 5. | கல்வித்தகுதி | | | | | | | | |
| 6. | ஓட்டுநர் உரிமம் எண். | | | | | | | | |
| 7. | பணி முன் அனுபவ விவரம் | | | | | | | | |
| 8. | முழு அஞ்சல் முகவரி<br><br>(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | | | | | | | | |

| | | |
|---|---|---|
| 9. | சொந்த மாவட்டம் | |
| 10. | தொலைபேசி மற்றும் கைப்பேசி எண் | |
| 11. | மதம் | இந்து / கிறிஸ்தவர் / முஸ்லிம் / இதர மதத்தினர் (விவரம் குறிப்பிடப்பட வேண்டும்) |
| 12. | பழங்குடியினர் | ஆம் / இல்லை |
| 13. | உடல் ஊனமுற்றோர் | ஆம் / இல்லை |
| | முன்னாள் இராணுவத்தினர் | ஆம் / இல்லை |

- விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கிறேன்.
- தேர்விற்கு முன்போ அல்லது பிறகோ இவ்விவரங்கள் தவறு என அறியவரும் பட்சத்தில் என்மீது தேர்வுக்குழு எடுக்கும் நடவடிக்கைக்கு உட்படுகிறேன்.
- என் மீது குற்றவியல் வழக்குகள் ஏதும் பதியப்படவில்லை என உறுதியளிக்கிறேன்.

இடம்:

நாள்: **விண்ணப்பதாரர் கையொப்பம்**

குறிப்பு – கல்வி தகுதி, இருப்பிடம், சாதிச் சான்றிதழ், ஓட்டுநர் உரிமம் மற்றும் பணி முன்அனுபவச் சான்று ஆகியவற்றை சுய சான்றொப்பமிடப்பட்ட நகல்கள் விண்ணப்பத்துடன் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும். அசல் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் நேர்காணலின் போது சமர்ப்பிக்க வேண்டும்.